# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 110/2018 நாள்.23.03.2026

PW1- திரு.ஜாபர்பாட்ஷா, த/பெ. திரு.ஜமால்முகமது

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

என்னுடைய பூர்விகம் என்னஊர் என்றால் அய்யம்பேட்டை. பிரதிவாதிகளின் பூர்விகம் என்ன ஊர் என்றால் வத்தலகுண்டு, திண்டுக்கல் மாவட்டம். பிரதிவாதிகள் கணவன், மனைவி என்றால் ஆமாம். JS Traders எந்த ஆண்டு தொடங்கபட்டது என்றால் வருடம் ஞாபகமில்லை. பதிவு செய்யபட்ட வர்த்தக நிறுவனம் என்றால் ஆமாம். நானும் 1ஆம் பிரதிவாதியும் அந்நிறுவனத்தில் பங்குதாரர் என்றால் ஆமாம். பத்ரூ Traders இல் என் மனைவியும் 2ஆம் பிரதிவாதியும் பங்குதாரர் என்றால் ஆமாம். அதுவும் பதிவு செய்யபட்ட வர்த்தக நிறுவனம் என்றால் ஆமாம். முதலில் JS Traders, பத்ரூ Traders எது தொடங்கபட்டது என்றால் பத்ரூ Traders. இரண்டு நிறுவனங்களும் முந்திரி வாங்கி உள்நாடு வெளிநாடு வியாபாரம் என்றால் ஆமாம். 2ஆம் பிரதிவாதி 23.7.2015 இல் வெளியேறிவிட்டார் என்றால் தேதி தெரியாது வெளியேறிவிட்டார். பத்ரூ Tradersஇல் சுந்தரம் பங்குதாரராகிவிட்டார். இரண்டு நிறுவனத்திற்கும் பட்டய கணக்கர் கணக்கு உண்டு என்றால் ஆமாம். பத்ரூ Traders நிறுவனத்தில் பங்குதாரர் மாறியது தொடர்பாக பதிவு அலுவலகத்தில் தகவல் பதிவாகியுள்ளது என்றால் ஆமாம். இரண்டு Traders நிறுவனங்களும் தொழில் செய்கிறதா என்றால் ரத்தாகிவிட்டது. எந்த தேதியில் ரத்தானது என்றால் பத்ரூ Traders எங்களுடன் வந்துவிட்டது. JS Traders அவருடன் போய்விட்டது. நான் தஞ்சாவூர் நாஞ்சிகோட்டையில் என் மனைவிபெயரில் ஒரு இடம் தொழில் நிறுவன பகுதிக்குள் வாங்கபட்டது என்றால் ஆமாம். அதற்கான தொகை பத்ரூ Traders வருமானத்திலிருந்து கொடுக்கபட்டது என்றால் இல்லை. அந்த சொத்து வாங்கபட்ட காலத்தில் இரண்டு நிறுவனங்கள் நடைமுறையில் இருந்தது என்றால் ஆமாம். என் மனைவி வருமானவரி கணக்கில் பத்ரூ Traders வருமானம் மட்டும் காண்பிக்கபட்டது என்றால் அது தவிர என் மனைவிக்கு வேறு வருமானங்களும் உள்ளது அதுவும் காண்பிக்கபட்டது. என் மனைவி வருமானவரி கணக்கில் மேற்படி இடம் வாங்கியது சொல்லபட்டுள்ளது என்றால் சொல்லபட்டுள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்யமுடியும். மேற்படி இடம் பத்ரூ Traders க்கு வாடகைக்கு விடுவதற்காக வாங்கபட்டது என்றால் எங்களுக்கு சொந்தமாக வாங்கி எங்கள் நிறுவனத்திற்கு

வாடகைக்கு கொடுக்கபட்டது. பத்ரூ Traders க்கும் எனது மனைவிக்கும் வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டதா என்றால் இல்லை. எவ்வளவு வாடகை கொடுக்கபட்டது என்றால் வாடகை கொடுக்கவில்லை. அந்த காலகட்டத்தில் நிறுவனங்களின் கணக்கு யார் பார்த்தது என்றால் திரு.கோபாலகிருஷ்ணன். பத்ரூ Traders வருவாய் கணக்கு மற்றும் என் மனைவியின் வருமான கணக்கில் வாடகை பற்றி சொல்லபட்டதா என்றால் ஞாபகமில்லை. பத்ரூ Traders பங்குதாரர் சுந்தரம் மனைவிக்கு மேற்படி இடம் வாங்கபட்ட விபரம் தெரியுமா என்றால் வாங்கிய பிறகு தெரியும். பத்ரூ Traders வருமானத்தில்தான் வாங்கினேன் என்று சுந்தரம் என்னோடு காழ்புணர்ச்சியானார் என்றால் இல்லை. பத்ரூ Traders வருமானத்தில்தான் வாங்கினேன் என்றும் அதனால்தான் சுந்தரம் என்னோடு காழ்புணர்ச்சியானார் என்றும் வழக்கிற்காக இல்லை என்று சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நாஞ்சிகோட்டை மேற்படி இடம் தற்போது வரை எங்களிடம் உள்ளதா என்றால் விற்றுவிட்டோம். எந்த வருடம் விற்றேன் என்றால் நினைவில்லை. அந்த இடம் கட்டிடமா காலியிடமா என்றால் காலியிடம். அது அனுமதி பெற்று கட்டிடம் கட்டபட்டது என்றால் ஆமாம். அந்த கட்டிடம் கட்ட எவ்வளவு செலவானது என்றால் அப்போது சுந்தரம் என்னோடு இல்லை. அப்போது அந்த இடத்தில் தொழில் நடக்கவில்லையா என்றால் ஆமாம். எவ்வளவுக்கு விற்றேன் என்றால் 25லட்சம். நான் 2016, 2017 இல் விற்றுவிட்டேனா என்றால் 2020 இருக்கும். 5.10.2015 இல் நான் 2ஆம் பிரதிவாதிக்கு கடிதம் எழுதினேனா என்றால் நினைவில்லை. அதன்பிறகு எங்களுக்குள் கணக்கு வழக்கு பார்க்கபட்டதா என்றால் நிறைய பார்க்கபட்டது. 1ஆம் பிரதிவாதி பல நபர்களிடம் ரூ.35,02,152 கடனாக பெற்று பின்பு நான் சொன்னதன் அடிப்படையில் பல்வேறு தரப்பினருக்கு ரூ.97,11,656/- திரும்பி செலுத்தியுள்ளார் என்றால் வாங்கியது எனக்கு தெரியாது, நான் எதுவும் சொல்லவும் இல்லை அவர் கொடுத்தும் தெரியாது. மேற்படி விபரங்கள் JS traders நிறுவன கணக்கில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. எதற்காக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் என்றால் எனக்கும் சுந்தரத்திற்கு இடையே உள்ள நிறுவனத்தில் அவருடைய மகள் பிருந்தாலெட்சுமியை கணக்கராக கொண்டுவந்து வைத்தார் அதனால் பிரச்சனை. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் வா.சா.ஆ.1 நான் கொடுத்த புகார் என்றால் ஆமாம். அந்த புகாரில் சொல்லபட்டுள்ள ரூ.1,12,00,000 என்று சொல்லியுள்ளேனே அது தவிர அதில் ரூ.9,50,000 என்று சொல்லியுள்ளேனே அது என்ன என்றால் அது இன்னோரு கம்பெனி என் மகன் பெயரிலுள்ளது. பிருந்தாலெட்சுமி சுந்தரத்தின் மகள் என்றால் ஆமாம். அவர் கம்பெனியில் பங்குதாரர் இல்லை என்றால் ஆமாம். 2.11.2016 இல் கொடுக்கபட்ட புகார் தஞ்சாவூர் தெற்கு காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு அனுப்பபட்டது

என்றால் ஆமாம். மேற்படி புகாரின் அடிப்படையில் மூவரையும் அழைத்து விசாரித்தார்களா என்றால் அந்த பெண் வரவில்லை மறுத்துவிட்டது. ஆய்வாளர் எங்களுக்குள் பேச்சு வார்த்தை நடத்தினாரா என்றால் பேசினார் நேருக்குநேராக எங்களை வைத்து பேசவில்லை சுந்தரம் ஓடிஒளிந்துவிட்டார். அப்போது ஆய்வாளர் அவரிடம் விசாரணைக்கு வரவேண்டும் இல்லையென்றால் Remand பண்ணுவேன் என்று சொன்னார் என்றால் எனக்கு தெரியாது. அந்த புகார் மீது என்ன நடவடிக்கை எடுக்கபட்டது என்றால் புகார் இருக்கும்போது சுந்தரம் பஞ்சாயத்து கூட்டினார். சுந்தரம் பஞ்சாயத்துக்கு என்னை யார் கூப்பிட்டது என்றால் சாத்தனூர் ஆறுமுகம் கூப்பிட்டார். இவ்வாறு பஞ்சாயத்துக்கு அழைத்தவிபரத்தை ஆய்வாளரிடம் சொன்னேனா என்றால் இல்லை. புகார் நிலுவையில் இருக்கும்போது ஏன் பஞ்சாயத்திற்கு கூப்பிட்டீர்கள் என்று நான் சுந்தரத்திடம் கேட்டேனா என்றால் கேட்டேன். பஞ்சாயத்து எங்கு கூட்டபட்டது என்றால் சாத்தனூர் ஆறுமுகம் வீடு. வழக்கு சம்மந்தமான விபரங்கள் என்னால் சொல்லபட்டது என்றால் ஆமாம். பிராதில் 2.11.2016இல் புகார் ஒன்று கொடுத்தாகவும் அந்த புகாரின் அடிப்படையில் வாதி பிரதிவாதிகளை தஞ்சாவூர் தெற்கு காவல்நிலையத்தில் அழைத்துவிசாரிக்கபட்டத என்ற விபரம் என்னால் சொல்லபட்டதுதான். வா.சா.ஆ.2 யாரால் எழுதபட்டது என்றால் சாத்தனூர் ஆறுமுகத்தின் மகன் எழுதினார்.வா.சா.ஆ.2 வாசகங்கள் யாரால் எழுதபட்டது என்ற விபரம் உள்ளதா என்றால் இல்லை. பத்திரதாள் யார் வாங்கி வந்தது என்றால் சுந்தரமே வாங்கி வந்தார். பஞ்சாயத்து பேசுவதற்கு முன்பாக வாங்கி வந்தார் என்றால் இருக்கலாம். வா.சா.ஆ.2 4வது பக்கத்தில் கையெழுத்து போன்றோ அல்லது எழுதியது போன்றோ உள்ள ஒன்றின்மேல் அடித்து வைக்கபட்டுள்ளது என்றால் உள்ளது நான் செய்யவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் பஞ்சாயத்தார்களின் விலாசம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி பஞ்சாயத்தார்களின் பெயர் விலாசம் கேட்டேனா என்றால் இல்லை நான் பணம்தான் கேட்டேன். மேற்படி ஆவணத்தை தெற்கு காவல்நிலையத்தில் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அதனால்தான் பிருந்தாலெட்சுமி மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஏற்படாவிட்டால் சுந்தரத்தின் மீதும் அவர் மகள் மீதும் வழக்கு போடுவேன் என்று ஆய்வாளர் சொன்னார் என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 ஆவணம் எனக்கு எப்படி வந்தது என்றால் நான் போய் கேட்டு வாங்கினேன். அதை எப்போது கேட்டு வாங்கினேன் என்றால் நினைவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தின் 2வது பக்கத்தில் உள்ள பத்திர எழுத்துகளும் வா.சா.ஆ.2 ஆவணத்தின் முதல் பக்கம் என்றால் ஆமாம். பஞ்சாயத்து ஏற்பட்ட அன்றே அந்த ஆவணத்தை அவர்களிடம் கொடுத்தேனா என்றால் 2, 3 நாட்களில் கொடுத்தேன். அந்த நாட்களில் சுந்தரத்தையும் அவர் மகளையும் போலிஸார் தேடினார்கள்

என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 ஆவணம் அதன்பிறகு எல்லோரையும் கூப்பிட்டு விசாரித்து எழுதினார்களா என்றால் அவரை விசாரிக்கும்போது நான் இல்லை, என்னை விசாரிக்கும்போது அவர் இல்லை. அதன்பிறகு புகாரை போலிஸார் முடித்துவைத்துவிட்டார்கள் என்றால் ஆமாம். பணம் வாங்க வேண்டியதற்காக புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம் சுந்தரம்மகள் பணத்தை எடுத்துகொண்டு போய்விட்டது. வா.சா.ஆ.2 ஆவணம் ஆய்வாளரின் வற்புறுத்தலின்பேரில் ஏற்பட்டது என்றும், சொன்னால் சரியல்ல. அது சட்டப்படி நடைமுறைபடுத்தமுடியாத ஒன்று என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணமும் 1ஆம் பிரதிவாதி மிரட்டி எழுதி வாங்கியது என்றும் அதனால் அது நடைமுறைபடுத்தமுடியாது என்றால் சரியல்ல. பஞ்சாயத்தார்கள் காவல்நிலையத்திற்கு வந்தார்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.2ன் படி எவ்வளவு தொகைக்கு முடிக்கபட்டது என்றால் ரூ.20,00,000/-. 2016 க்கு பிறகு வழக்கறிஞர் அறிவிப்பு சுந்தரம் எனக்கு கொடுப்பதற்கு முன்பாக நான் நீதிமன்றத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் இல்லை. நான் 1ஆம் பிரதிவாதியின் மனைவி 2ஆம் பிரதிவாதி மேற்படி நிறுவனங்களின் பணத்தை கொண்டு சொத்து வாங்கினார் என்று வழக்கு போட்டேன் என்றால் இல்லை அவர்கள்தான் என் மீது போட்டார்கள். பிரதிவாதிகள் என்ன கட்சி சொல்கிறார்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். பிரதிவாதிகள் மீது புதுகோட்டை மாவட்டம் முன்சீப் நீதிமன்றத்தில்அ.வ எண் 91/2018 என்ற வழக்கை நானே தாக்கல் செய்து பின்பு வாபஸ் வாங்கிகொண்டேன் என்றால் இல்லை. அதன்பிறகு பிரதிவாதி அறிவிப்பு அனுப்பியதன் பின்பு பொய்யாக காரணம் கூறி இந்தவழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-4 நாங்கள் வழக்கறிஞர் மூலம் பிரதாதிகளுக்கு அனுப்பினோம் என்றால் ஆமாம். என்ன காரணத்திற்காக அது அனுப்பப்பட்டது என்றால் பணம் கேட்டு அனுப்பியுள்ளோம். 20 லட்சத்தில் 5லட்சம் வந்துவிட்டது 15லட்சம் வரவில்லை. அந்த அறிவிப்பில் 2வது நபர் வெங்கடேசன் என்பவர் யார் என்றால் சுந்தரத்தின் சம்மந்தி பிருந்தாலெட்சுமியின் மாமனார். அவருக்கும் இந்த வரவு செலவுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் உள்ளது. பஞ்சாயத்துக்கு பிறகுதான் வா.சா.ஆ.4 அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். பிருந்தாலெட்சுமி வா.சா.ஆ.2 ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுள்ளாரா என்றால் பஞ்சாயத்திற்கே வரவில்லை. வா.சா.ஆ-4ஐ சுந்தரத்திற்கோ அவர் மனைவிக்கோ அனுப்பாமல் வெங்கடேசனுக்கும் பிருந்தாலெட்சுமிக்கும் மட்டும் அனுப்ப வேண்டிய காரணம் என்ன என்றால் சரியல்ல அவர்களுக்கும் அனுப்பியுள்ளேன். அந்த அறிவிப்பு நகலை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.8 4.11.1996 ஏற்பட்ட கிரையம் என்றால் ஆமாம். 1996இல் JS Traders, பத்ரூ Traders நடந்ததா என்றால் பத்ரூ Traders நடந்தது,

JS Traders குறித்து ஞாபகமில்லை. வா.சா.ஆ.2,3 வற்புறுத்தலின் பேரில் ஆய்வாளர் பஞ்சாயத்தார்கள் மற்றும் நான் ஆகியோர் சேர்ந்து எழுதசொன்னது என்று சொன்னால் இல்லை. வா.சா.ஆ.2, 3 ஆவணங்கள் ஒப்பந்த சட்டத்தின்படி நிலைக்ககூடியதல்ல என்றும் அதன் அடிப்படையில் நீதிமன்றத்தை அணுக முடியாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2, 3 தஞ்சாவூர் தெற்கு காவல்நிலையத்தில் வைத்து எழுதபட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. நான் உண்மை சங்கதிகளை மறைத்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN
Date: 2026.03.23 18:44:39 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**